

# SIVAPURANAM MISSION

www.Sivapuranam.in

திருச்சிற்றம்பலம்

# 30. திருக்கழுக்குன்றப் பதிகம்

(திருக்கழுக்குன்றத்தில் அருளியது)

சற்குரு தரிசனம்

(எழுசீர் ஆசிரிய விருத்தம்)



# திருச்சிற்றம்பலம்



பிணக்கு இலாத பெருந்துறைப் பெருமான்பூ
உன் நாமங்கள் பேசுவார்க்குறப
இணக்கு இலாததோர் இன்பமே வரும்
துன்பமே துடைத்து எம்பிரான்
உணக்கு இலாததுஓர் வித்து மேல்
விளையாமல் என்வினை ஒத்தபின்
கணக்கு இலாத் திருக்கோலம் நீவந்து
காட்டினாய் கழுக்குன்றிலே 1





பிட்டு நேர்பட மண் சுமந்த
பெருந்துறைப் பெரும் பித்தனே
சட்ட நேர்பட வந்தி லாத
சழக்கனேன் உனைச் சார்ந்திலேன்
சிட்டனே சிவலோகனே சிறு
நாயினும் கடையாய வெம்
கட்ட னேனையும் ஆட்கொள்வான் வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே 2





மலங்கினேன் கண்ணின் நீரை மாற்றி
மலம் கெடுத்த பெருந்துறை
விலங்கினேன் வினைக் கேடனேன் இனி
மேல் விளைவது அறிந்திலேன்
இலங்குகின்ற நின் சேவடிகள்
இரண்டும் வைப்பிடம் இன்றியே
கலங்கினேன் கலங்காமலே வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே. 3





பூண் ஒணாதஓர் அன்பு பூண்டு
பொருந்தி நாள்தொறும் போற்றவும்
நாண் ஒணாதஓர் நாணம் எய்தி
நடுக்கடலுள் அழுந்தி நான்
பேண் ஒணாத பெருந்துறைப் பெருந்
தோணி பற்றி உகைத்தலுங்
காண் ஒணாத் திருக்கோலம் நீவந்து
காட்டினாய் கழுக்குன்றிலே 4





கோல மேனி வராகமே குணம்
ஆம் பெருந்துறைக் கொண்டலே
சீலம் ஏதும் அறிந்திலாத என்
சிந்தை வைத்த சிகாமணி
ஞாலமே கரியாக நான்உனை
நச்சி நச்சிட வந்திடும்
காலமே உனைஓத நீ வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே





பேதம் இல்லது ஓர் கற்பு அளித்த
பெருந்துறைப் பெருவெள்ளமே
ஏதமே பல பேச நீ எனை
ஏதிலார் முனம் என்செய்தாய்
சாதல் சாதல் பொல்லாமை அற்ற
தனிச்சரண் சரண்ஆம் எனக்
காதலால் உனைஓத நீ வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே

6





இயக்கி மார் அறுபத்து நால்வரை

எண்குணம் செய்த ஈசனே

மயக்கம் ஆயதுஓர் மும்மலப் பழ

வல் வினைக்குள் அழுந்தவும்

துயக்க அறுத்துஎனை ஆண்டுகொண்டு நின்

தூய்மலர்க் கழல் தந்துஎனைக்

கயக்க வைத்து அடியார் முனேவந்து

காட்டினாய் கழுக்குன்றிலே.



ஸ்ரீ மாணிக்கவாசகர்